**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 71/2019** **Date:15.04.2026.**

**(PW2)- பாஸ்கரன்**

<u>**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் எத்தனை சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளார் என்றால் 2 சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளார். மேற்படி சொத்துக்களின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 99 ஆகும். தாவா சொத்துக்களில் எந்த இனச் சொத்தை தொட்டு வழிப்பாதை உள்ளது என்றால் தாவா சொத்தின் பகுதி சொத்திற்கு வடக்கு பக்கம் வழிப்பாதை உள்ளது. வடக்கு பக்க உள்ள வழிப்பாதை தாவா சொத்தின் எந்த இனச் சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் எந்த இனச் சொத்து என்று எனக்கு தெரியாது. தாவா இரண்டு இனச் சொத்திற்கு கிழக்கு பக்கம் எல்கை என்ன என்றால் வழிப்பாதை உள்ளது.

2. வாதி எத்தனை நபர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 14 நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார். வாதி இவ்வழக்கில் சேர்த்துள்ள 2 ஆம் இனச் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 72 செண்ட் ஆகும். பேரூராட்சியில் இருந்து வந்த நபரின் பெயர் என்ன என்றால் ஒரு நபர் பெயர் சங்கர்கணேஷ் ஆகும், மற்ற நபர்கள் பெயர் தெரியாது. மற்ற நபர்களின் பெயரை நான் யாருக்கும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எந்த சர்வே எண் சொத்தில் ஆக்கிரமிப்புபை அகற்றினார்கள் என்றால் சர்வே எண் 99 ல் உள்ள சொத்தாகும். பவுலின் சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள பாதை பிரதான சாலையை சென்று அடைகிறது என்றால் சரிதான். மேற்படி வடக்கு பக்க சாலையில் டெம்போ முதலிய வாகனங்கள் செல்கிறது என்றால் டெம்போ செல்வது கடினமாகும் அதை விட சிறிய வாகனங்கள் எளிதாக செல்லும்.

3. மேற்படி வடக்கு பக்க பாதையில் பஞ்சாயத்து சார்பில் காண்கீரிட் தளம் அமைக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி பாதையின் அகலம் 15 அடி இருக்குமா என்றால் ஒரு சில இடங்களில் 10 அடியும் ஒருசில இடங்களில் 12 அடியும் இருக்கும். மேற்படி பாதை 15 அடி இருக்கும் என்றாலும் அதில் டெம்போ முதலிய வாகனங்கள் சென்று வருகிறது என்றாலும் சரியல்ல. பவுலின் சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள பாதை மாதவிளை சென்று சேரும் என்றால் சரியல்ல. மேற்படி வாதியின் சொத்தின் கிழக்கு பக்கத்தில் செல்லும் சாலை தெற்கே தட்டாண்விளையில் இருந்து வரும் சாலையில் சென்று சேரும் என்றால் சரிதான்.

4. மேற்படி தெற்கே உள்ள தட்டாண்விளை ரோட்டை சென்று அடையும் கிழக்கு பக்க பாதையின் நீளம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 1 Furlong இருக்கும். மேற்படி பாதையில் தென்வடலாக காண்கீரிட் தளம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சிறிது இடத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. காண்கீரிட் 10 முதல் 15 அடி அகலத்திற்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 5 அடி அகலத்தில் பஞ்சாயத்தால் போடப்பட்டது. வாதியின் சொத்திற்கு தெற்காக அமைந்துள்ள முருகன் கோவிலுக்கு தெற்கு மேற்படி பாதை சென்று அடையும் என்றால் சரிதான். மேற்படி காண்கீரிட் தளம் கோவிலுக்கு தெற்கே உள்ள பகுதியில் தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வாதியின் சொத்திற்கு தெற்கே 2 கண்டங்கள் தாண்டி கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவில் வழிப்பாதைக்கு கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலை வழிபடும் வாதியின் சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள நபர்கள் வாதியின் சொத்திற்கு கிழக்கே உள்ள பாதை வழியாகதான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. எனது மகனின் பெயர் என்ன என்றால் விஜயகுமார் ஆகும். எனது மகன் ஆட்டோ ஓட்டுநர் என்றால் சரிதான். எனது வீடு வாதியின் வீட்டிற்கு தெற்கே உள்ளது என்றால் சரியல்ல, கிழக்கு பக்கம் உள்ளது. வாதியின் சொத்திற்கு கிழக்கே

பாதை ஒட்டி கிழக்கு பக்கம் உள்ள முதல் வீடு யாருடையது என்றால் வசந்தா என்பவர் உடையதாகும். மேற்படி வசந்தா வீட்டிற்கு தெற்கே எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது மகன் அவர் ஆட்டோவை எங்களது சொத்தில் நிறுத்துவார் என்றால் சரியல்ல. வாதி எந்த வருடம் முள்வேலி அமைத்துள்ளார் என்றால் 2009 வருடம் அமைத்தார். வாதியின் சொத்தில் கிழக்கு ஒரமாக எத்தனை தென்னை மரங்கள் இருந்தது என்றால் 10 தென்னை மரங்கள் இருந்தது.

6. மேற்படி தென்னை மரங்கள் 2009 வருடத்திற்கு முன்பு அல்லது பின்னர் நடப்பட்டதா என்றால் 2009 முன்பே நட்டுவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கிழக்கு ஓரத்தில் வடக்கு அல்லது தெற்கு பக்கம் உள்ள மரங்களை அகற்றினார்கள் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வாதி சொத்தில் வடகிழக்கில் கம்பி வேலி இருந்ததால் அப்பகுதியில் உள்ள மரங்கள் அகற்றபடவில்லை என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் அ.வ.எண் 24/2019 என்ற வழக்கை எனது மனைவி தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் என்றால் நினைவில்லை.

7. மேற்படி வழக்கும் ஆக்கிரமிப்பை அகற்றியதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வாதி தனது சொத்தின் கிழக்கே ரோடு இருந்ததாக வா.சா.ஆ.6,7 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் ரோடு கிடையாது 3 அடி பாதை மட்டும் உண்டு. எந்த ஆவணத்தில் 3 அடி பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் குறிப்பிடுவது போல் எந்த ஆவணத்திலும் 3 அடி பாதை குறிப்பிடவில்லை என்றாலும் நான் வழக்கிற்கா பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. நான் குறிப்பிட்டுள்ள JCB யை யார் வாடகைக்கு எடுத்து வந்தார் என்றால் 1,2 பிரதிவாதிகள் ஆவர். மேற்படி விபரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் நேரடியாக பார்த்தேன். அரசாங்க அதிகாரிகள் புறம்போக்கு நிலத்தை அகற்றுவதற்கு தான் வந்தார்கள் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் இந்துகள் என்றால் சரிதான். மேற்படி கோவில் 1, 2 பிரதிவாதிகளின் குடும்ப கோவில் என்றால் 2 ஆம் பிரதிவாதியின் குடும்ப கோவில் ஆகும். மேற்படி கோவில் 400 வருடங்களாக உள்ளது என்றால் சரியல்ல, 5 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டதாகும். மேற்படி கோவில் 300 வருடங்குளுக்கு முன்பு அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கோவிலுக்கு செல்வதற்கு வாதியின் சொத்திற்கு கிழக்கே உள்ள பாதையை வழிபாதையாக பயன்படுத்துகிறார்கள் என்றால் ஒன்று அல்லது இரண்டு குடும்பத்தினர் பயன்படுத்துகிறார்கள். கோவிலுக்கு அருகே எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 3 வீடுகள் உள்ளது.

9. மேற்படி முருகன் கோவிலை கட்டுவதற்கு கட்டுமான பொருட்களை மேற்படி பாதை வழியாகதான் கொண்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பகுதியில் மேற்படி முருகன் கோவிலுக்கு பக்கதர்கள் செல்லக்கூடாது என்பதற்காக கிருஷ்தவராகிய நானும் வாதியும் சேர்ந்து ரோடு வராமல் இருப்பதற்கு தடை ஏற்படுத்தி ரோட்டை ஆக்கிரமித்து எங்களது சொத்துடன் சேர்த்து கொண்டோம் என்றால் சரியல்ல. எனது வீட்டின் வடக்கு பக்கம் உள்ள வசந்தாவின் சொத்தில் ஆக்கிரமிப்பு இல்லை என்றால் சரிதான். அன்றை தினம் ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், பேரூராட்சி அதிகாரிகள், நிலஅளவையர்கள் உடன் இருந்தனர் என்றால் சரிதான். அன்றைய தினம் வாதியின் மனைவி பஞ்சாயத்து உறுப்பினராக இருந்தார் என்றால் சரிதான். அவர் உறுப்பினராக இருந்த சமயத்தில் போடப்பட்ட பஞ்சாயத்து தீர்மாணம் அவர்களுக்கு

தெரிந்திருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. நானும் வாதியும் அவரது மனைவியும் எங்களை சார்ந்தவர்களும் வாதி சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள வழிப்பாதையை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டால்தான் மேற்படி பாதையை பயன்படுத்த முடியும் என்பதால் 1, 2 பிரதிவாதிகள் மாவட்ட ஆட்சியர் மற்றும் மற்ற அதிகாரிகளுக்கு மனு கொடுத்தார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் தான் ஆக்கிரமிப்புகள் முறையாக அளவீடு செய்து அகற்றப்பட்டது என்றாலும் நானும் வாதி மற்றும் அவரது மனைவி அன்றைய தினம் அரசு அதிகாரிகளின் சட்ட பூர்வமான செயல்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதால் எங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்துவிடகூடாது என்பதற்காக இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் அதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு அகற்றப்படும் சமயத்தில் அந்த ஊரை சார்ந்த பொதுமக்கள் அப்பகுதியில் இருந்தார்கள் என்றால் சரியல்ல, 1, 2 நபர்கள் பார்த்திருப்பார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்றாலும் அவர்கள் இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினர் என்றாலும் சரியல்ல. நான் வாதி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**